திரவியத் தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 245, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

245—

சத்துணவு மையக் கட்டடம்

***51656 — திரு. கு. லிங்கமுத்து:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, சேம்பள்ளி ஊராட்சி, சேம்பள்ளியில் உள்ள சத்துணவு மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் தொகுதி, சேம்பள்ளி ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியில் பழுதடைந்துள்ள சத்துணவுக் கூடத்தை அகற்றி, 220 சதுர அடி பரப்பளவு கொண்ட வைப்பறையுடன்கூடிய புதிய சத்துணவுக் கூடம் கட்டுவதற்காக ரூபாய் 2,40,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு, சத்துணவுக் கூடம் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*

திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி, சேம்பள்ளி ஊராட்சியில்*

2015 செப்டம்பர் 14]

ஏழு அங்கன்வாடி மையங்கள் உள்ளன. அந்த ஏழு மையங்களில் மூன்று மையங்கள் சொந்தக் கட்டடத்தில் செயல்படுகின்றன. இரண்டு மையங்களுக்குக் கட்டடம் கட்டிட இந்த ஆண்டு தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியை வழங்கியிருக்கின்றேன். மீதி இரண்டு அங்கன்வாடி மையங்கள் பழுதடைந்த வாடகைக் கட்டடத்தில் செயல்படுகின்றன. எனவே, வாடகைக் கட்டடத்தில் செயல்படுகின்ற அந்தப் பழுதடைந்த அங்கன்வாடி மையங்களுக்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சத்துணவுக் கூடம் பழுதடைந்திருக்கிறது என்று குறிப்பிட்டார். ஆனால், தற்போது அங்கன்வாடி மையத்தைப் பற்றிக் கேள்வி கேட்டிருக்கிறார். பழுதடைந்திருக்கிற அங்கன்வாடி மையக் கட்டடத்தைச் சரி செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை நிதியிலிருந்து தொகையைப் பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*

முற்பகல் 10-35

திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற நிதியாண்டு வரையில் அங்கன்வாடி மையம் கட்டிட 5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி, அதில் கட்டிக் கொண்டிருந்தார்கள். ஆனால், இப்போது 5 இலட்சம் ரூபாய் என்பது போதாது; அதனால் நிதியைத் திருப்பி அனுப்புகிற நிலை இருக்கின்றது. அந்த அங்கன்வாடி மையங்கள் 500 சதுர அடியில் கட்டப்படுகின்றன. 500 சதுர அடியில் 300 சதுர அடி பிள்ளைகள் அமர்வதற்காகவும், 200 சதுர அடி* toilet *போன்ற கட்டடங்கள் கட்டுவதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றது. இதனைக் கட்டுவதற்கு 6 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் கேட்கின்றார்கள். எனவே, மாநிலம் முழுவதும் ஒரே அளவாக நிதி ஒதுக்கீடு செய்ய*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் அறிவுரைகள் வழங்குவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்களுக்கான கட்டடங்கள் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாகக் கட்டப்படுகின்றன. அதற்கான நிதி ஒதுக்கீடு சத்துணவுத் துறையின்மூலம் செய்யப்படுகிறது. மேலும், பொதுப் பணித் துறையினுடைய பொறியாளர்கள்தான் விதிகளுக்குட்பட்டு, குறிப்பிட்ட ஒரு மையம் கட்டுவதற்கு எவ்வளவு செலவாகும் என்பதை மதிப்பிட்டு, தொகையை நிர்ணயித்துத் தருகிறார்கள். அதன் அடிப்படையிலேயே நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது புதிதாக ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அது சம்பந்தமாக ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, சரி செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 246, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி, மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

246—

திருக்கோயில் சிற்பங்களைப் புதுப்பித்தல்

***39918—திருமதி ச. முத்துசெல்வி:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவிலில் உள்ள அருள்மிகு சங்கர நாராயண சுவாமி திருக்கோயில் சிலைகள், கல்தூண்கள் மற்றும் தொன்மையான ஓவியங்களைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?